# COVID-19 தடுப்பூசி மருந்து

## நான் ஏன் தடுப்பூசி மருந்து பெற வேண்டும்?

இந்த தடுப்பூசி மருந்து உங்களை COVID-19 நோயிலிருந்து பாதிக்கப்படாமல் பாதுகாக்கும். சிலர் COVID-19 இலிருந்து மருத்துவமனை பராமரிப்பு தேவைப்படும் அளவில் மிகவும் நோய்வாய்ப்படலாம்.

## தடுப்பூசி மருந்து எவ்வாறு செயல்படுகிறது?

தடுப்பூசி மருந்தானது நோய் எதிர்ப்புப் பொருட்கள்/ஆன்டிபாடிகளை உருவாக்க நம் உடலுக்கு சொல்கிறது. நாம் COVID-19 க்கு ஆளாகும் போது, நம்மை நோய் எதிர்ப்புப் பொருட்கள்/ஆன்டிபாடிகள் நோய்வாய்ப்படாமல் பாதுகாக்கும். தடுப்பூசி மருந்தில் வைரஸ் இல்லை, எனவே தடுப்பூசி மருந்து பெறுவதன் மூலம் நீங்கள் COVID-19க்கு ஆளாக மாட்டீர்கள்.

## தடுப்பூசி மருந்து பாதுகாப்பானதா?

ஆம். பாதுகாப்புக்காக தடுப்பூசி மருந்து பரிசோதிக்கப்பட்டுள்ளது, மேலும் கனடாவில் பயன்படுத்த ஹெல்த் கனடா ஒப்புதல் அளித்துள்ளது. நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், இதய நோய் மற்றும் ஆஸ்துமா உள்ளவர்களுக்கு இந்த தடுப்பூசி மருந்து பாதுகாப்பானது.

## எனக்கு ஒவ்வாமை இருக்கிறது. நான் தடுப்பூசி மருந்து பெறலாமா?

COVID-19 தடுப்பூசி மருந்தில் கரு, ஜெலட்டின், பாதுகாப்பான்கள் அல்லது நுண்ணுயிர் எதிர்ப்பிகள் இல்லை. உங்களுக்கு தடுப்பூசி மருந்து போடுவதற்கு முன்பு அது உங்களுக்கு பாதுகாப்பானது என்பதை உறுதிப்படுத்த செவிலியர் உங்களுடன் தடுப்பூசி மருந்துப் பொருட்களின் பட்டியலை மதிப்புரை செய்வார்.

## எனக்கு ஏற்கனவே COVID-19 இருந்தது. நான் தடுப்பூசி மருந்து பெற வேண்டுமா?

ஆம். COVID-19 க்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தி மிக நீண்ட காலமாக உங்களைப் பாதுகாக்காது. மீண்டும் COVID-19 க்கு பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. பாதுகாப்பாக இருக்க தடுப்பூசி மருந்துப் பெற்றுக் கொள்வது நல்லது.

## ஏதேனும் பக்க விளைவுகள் உண்டா?

தடுப்பூசி மருந்து உட்செலுத்தப்பட்ட இடத்தில் வலி அல்லது சிவந்து இருத்தல், தலைவலி, காய்ச்சல் மற்றும் தசை வலியை ஏற்படுத்தும். பெரும்பாலான பக்க விளைவுகள் சில நாட்களிலேயே போய்விடும். உங்களுக்கு தடுப்பூசி மருந்து போட்ட பிறகு எந்த எதிர்வினைகள் இருந்தாலும் ஒரு செவிலியர் உங்களை கண்காணிப்பார்.

**ஏதேனும் கேள்விகள் உள்ளதா? எங்களை 416-338-7600 என்ற எண்ணில் அழைக்கவும்.**

TORONTO

toronto.ca/COVID19

Tamil